TTK Prestige
LIMITED

Corporate Office: Nagarjuna Castle,
No 1/1 & 1/2, Wood Street, Ashok Nagar,
Richmond Town, Bengaluru - 560025.
Ph: 91-80-68447100, 22217438/39
ttkprestige.com ttkcorp@ttkprestige.com CIN: L85110TZ1955PLC015049

ISO 9001 : 2015
ISO 14001: 2015
ISO 45001: 2018

July 29, 2026

National Stock Exchange "Exchange Plaza", C-1, Block G, Bandra- Kurla Complex, Bandra (E), Mumbai – 400 051.	BSE Limited 27th Floor, Phiroze Jeejeebhoy Towers, Dalal Street, Fort, Mumbai - 400 001.
Scrip Symbol : TTKPRESTIG	Scrip Code : 517506

Dear Sir,

Sub: Newspaper Advertisement of Unaudited Financial Results for the first quarter ended June 30, 2026-

This is with reference to our letter dated July 28, 2026, on the unaudited financial results.

The newspaper advertisement appeared in Financial Express, Economic Times and Dinamalar on July 29, 2026.

We are enclosing a copy of the newspaper advertisement for your reference.

This is for your information and records.

Thanking you,

Yours faithfully,
For TTK Prestige Limited,

MANJULA K V Digitally signed by MANJULA K V
Date: 2026.07.29 18:44:20 +05'30'

Manjula K V
Company Secretary & Compliance Officer

CHAIRMAN CREDITS ONSHORING, CUSTOMER TIES

Birla Group shrugs off global challenges

FE BUREAU
Chennai, July 28

KUMAR MANGALAM BIRLA
CHAIRMAN, ADITYA BIRLA GROUP

We have been pretty unscathed despite the fact that we have a presence across so many countries

DESPITE ONGOING GEOPOLITICAL tensions and the resulting increase in fuel prices, the core businesses of the Aditya Birla Group have remained largely unaffected, according to Kumar Mangalam Birla, chairman of the Aditya Birla Group.

"We have been pretty unscathed despite the fact that we have a presence across so many countries," Birla said during an interactive session at the 190th Annual General Meeting of the Madras Chamber of Commerce & Industry in Chennai on Tuesday. He said the biggest impact of geopolitical tensions has been the rise in fuel prices.

"In most cases, we have been able to pass on the additional cost to our customers," Birla said, attributing this to the benefits of onshoring, friendshoring and the Group's deep customer relationships.

The Aditya Birla Group is a $72-billion multinational conglomerate with interests spanning metals, cement, textiles, chemicals, financial services and telecom. As of June 1, its consolidated market capitalisation stood at over $118 billion, with operations across 41 countries.

On the challenges of raising manufacturing's share in GDP, Birla said the issue is not unique to India. Citing Hindalco Industries' proposed $6-billion aluminium recycling and rolling facility in Bay Minette, Alabama, he said the company had to relocate the project because of environmental considerations.

"We changed our site because of environmental considerations. It is pretty much similar across countries. It's not like we're the only ones facing such issues," he said.

Birla also recalled Hindalco's $6-billion acquisition of Novelis, a global leader in flat-rolled aluminium products and the world's largest aluminium recycler, in 2007, describing it as an "audacious proposition".

"Novelis operated in 11 countries and generated revenues more than three times the size of Hindalco's. But the strategic logic was compelling," he said.

Birla noted that while Hindalco was primarily an upstream aluminium producer, Novelis was the global leader in value-added downstream rolled products used in automobiles, aerospace, beverage cans and other specialty applications, where margins are significantly higher. The acquisition helped Hindalco emerge as one of the world's leading aluminium companies.

"More significantly, we achieved overnight what would otherwise have taken perhaps a decade and tens of billions of dollars to build organically," Birla said, highlighting the Group's long-term vision and conviction.

Airtel tops June subscriber race

URVI MALVANIA
Mumbai, July 25

STRONG SIGNAL



BHARTI AIRTEL MAINTAINED its lead in subscriber additions in June 2026, adding 2.99 million wireless users, while market leader Reliance Jio added 2.15 million, according to data released by the Telecom Regulatory Authority of India (TRAI).

Vodafone Idea also continued to add subscribers, with net additions accelerating to 163,757 in June from 121,289 in May. However, most of the growth continued to come from the machine-to-machine (M2M) or enterprise connections segment, a business that generates significantly lower average revenue per user (Arpu). Excluding M2M connections, Airtel added 1.05 million users in June, trailing Jio's 1.48 million additions. Vodafone Idea, meanwhile, lost 0.46 million users, indicating a moderation in subscriber churn from a loss of 0.83 million in May.

Overall, India's telecom subscriber base rose to 1.348 billion in June from 1.343 billion in May, although net additions slowed to 4.96 million users from 6.95 million a month earlier, according to the telecom regulator.

Both urban and rural markets registered net subscriber additions during the month.

JLR India bucks global slowdown with record sales in Q1

AKBAR MERCHANT
Mumbai, July 28

JAGUAR LAND ROVER (JLR) India reported a record 11% year-on-year increase in retail sales to 1,665 units in the first quarter of FY27, driven by sustained demand for its flagship Range Rover and Defender models. Wholesale dispatches rose 4% to 1,694 units during the June quarter.

The company's core SUV portfolio comprising the Range Rover, Range Rover Sport and Defender accounted for more than 85% of retail sales in the quarter, with the Defender retaining its position as JLR India's best-selling model.

The performance comes as the company looks to capitalise on opportunities arising from the India-UK Free Trade Agreement (FTA). During the quarter, JLR reduced prices of the Range Rover SV and Range Rover Sport SV following the implementation of the trade pact, which lowered import duties on eligible British-built vehicles.

The price cuts have triggered a sharp increase in customer enquiries for the high-performance SV variants, while demand for bespoke customisation options across both models has also strengthened.

"The first quarter performance was driven by sustained demand for the Range Rover, Range Rover Sport and Defender. The India-UK FTA presents an opportunity to expand the reach of our specialised SV products and bespoke offerings, while our strong product pipeline positions us well for the rest of FY27," said Rajan Amba, managing director, JLR India.

அரியும் சிவனும் ஒன்னு!

ஆடித்தபசு காட்சியளித்த 'சங்கரநாராயண சுவாமி'

■ சங்கரன்கோவில், ஜூலை 29-

சங்கரன்கோவில் சங்கரநாராயணசுவாமி கோவில் ஆடித்தபசு திருவிழாவை முன்னிட்டு நேற்று 'சங்கரா, நாராயணா' என்ற பக்தி கோஷம் முழங்க சங்கரலிங்கசுவாமி பக்தர்களுக்கு 'சங்கரநாராயண சுவாமி'யாக அருட்காட்சி கொடுத்தார்.

தமிழகத்தில் உள்ள புகழ்பெற்ற சிவ தலங்களில் சங்கரன்கோவில் சங்கரநாராயணசுவாமி கோவிலும் ஒன்று. இங்கு ஆண்டுதோறும் ஆடித்தபசு திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

முன்னொரு காலத்தில் சிவபக்தரான சங்கன், திருமால் பக்தரான பதுமன் என்ற 2 நாக அரசர்கள் இடையே 'சிவன், விஷ்ணு இருவரில் யார் பெரியவர்' என்ற சர்ச்சை ஏற்பட்டது. இதுகுறித்து இருவரும் கோமதி அம்பாளிடம் முறையிட்டனர். இதனால் 'சிவன், விஷ்ணு இருவரும் ஒருவரே' என்று உலகுக்கு உணர்த்த வேண்டி கோமதி அம்பாள் ஒற்றைக் காலில் தவசு இருந்தார்.

சங்கரன்கோவில் தபசுக் காட்சியில், கோமதி அம்பாளுக்கு காட்சியளித்த சங்கர நாராயணர்.

அம்பாளின் வேண்டுகோளை ஏற்று சங்கரலிங்க சுவாமி தனது உடலின் வலது புறத்தை சிவனாகவும், இடதுபுறத்தை திருமாலாகவும் மாற்றி, 'சங்கரநாராயண சுவாமி'யாக காட்சி கொடுத்தார். இந்த அரிய நிகழ்ச்சியே ஆண்டுதோறும் ஆடித்தபசு திருவிழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான ஆடித்தபசு திருவிழா கடந்த 20ம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது. 11ம் திருநாளான நேற்று மதியம் அம்பாள், தங்க சப்பரத்தில் எழுந்தருளி தபசு மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்.

மாலை 5 மணியளவில் சங்கரநாராயண சுவாமி சப்பரத்தில் எழுந்தருளி தெற்கு ரத வீதியில் உள்ள பந்தலுக்கு வந்து சேர்ந்தார். மண்டபத்தில் தபசு இருந்த கோமதி அம்பாள் தெற்கு ரத வீதியில் உள்ள பந்தலுக்கு வந்து சுவாமியை காண வேண்டி தபசு இருந்தார். அம்பாளின் வேண்டுகோளை ஏற்று மாலை 6.50 மணிக்கு 'சிவனும், விஷ்ணுவும் ஒன்று' என்ற ஒப்பற்ற தத்துவத்தை உலகுக்கு உணர்த்தும் வகையில் சங்கரலிங்கசுவாமி ரிஷப வாகனத்தில் தனது உடலின் வலதுபுறத்தை சிவனாகவும், இடதுபுறத்தை விஷ்ணுவாகவும் மாற்றி சங்கரநாராயண சுவாமியாக காட்சி கொடுத்தார். அப்போது 'சங்கரா, நாராயணா' என்ற பக்தர்களின் கோஷம் விண்ணை முட்டியது.

பக்தர்கள் தங்கள் நிலங்களில் விளைந்த பருத்தி, வத்தல், எலுமிச்சை, காய்கறி போன்ற விளை பொருள்களை சுவாமி, அம்பாள் மீது வீசி நேர்த்திக்கடன் செலுத்தினர்.

தொடர்ந்து இரவு 12 மணியளவில் சங்கரநாராயண சுவாமி யானை வாகனத்தில் சங்கரலிங்க சுவாமியாக காட்சி கொடுத்தார். இந்த அரிய காட்சியை ஆயிரக்கணக்கான பக்தர்கள் கண்டு தரிசனம் செய்தனர்.

மரம் வளர்ப்போம்
மழை பெறுவோம்

இந்தியாவுக்கே கலாச்சாரங்களை வழங்கியது தமிழகம்

நெல்லை பட்டமளிப்பு விழாவில் கவர்னர் பெருமிதம்

■ திருநெல்வேலி, ஜூலை 29-

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை.,யில் நடந்த 33வது பட்டமளிப்பு விழாவில் பல்கலை வேந்தரும், கவர்னருமான ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கலந்துகொண்டு, 371 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

கவர்னர் மாளிகை விதிமுறைப்படி, விழா தொடங்கியதும் வந்தே மாதரம், தேசிய கீதம் அதனை தொடர்ந்து, தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. அதுபோல், விழா நிறைவில், வந்தே மாதரத்தை தொடர்ந்து தேசிய கீதம் பாடப்பட்டது.

முன்னதாக மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி, கவர்னர் அர்லேகர் பேசியதாவது:

பட்டம் பெற்றுள்ள மாணவர்கள் இந்தியாவின் எதிர்காலம் மட்டுமல்ல, நிகழ்காலமும் கூட. உங்களுடைய திறமை, அனுபவம், பொறுமையை ஒருபோதும் புறக்கணித்து விட முடியாது. இப்போது பட்டம் பெற்றுள்ள நீங்கள் மிகுந்த மகிழ்ச்சியாகவும், மனநிறைவாகவும் இருக்கிறீர்கள் என்பதை உங்களுடைய முகங்களில் காண முடிகிறது. நீங்கள்தான் இந்தியாவின் எதிர்காலம் என்பதை உங்களுடைய முகத்தில் பார்க்க முடிகிறது.

உங்களிடம் எல்லா திறமைகளும் இருக்கின்றன. ஜந்தர் மந்தரில் போராடியவர்களின் கோரிக்கை நியாயமாக இருந்தாலும், உங்களிடம் இருக்கக்கூடிய பண்பாடு, கலாச்சாரம், நல்ல பண்பு அவர்களிடம் இல்லை. இந்தியாவில் மிகப்பெரிய கலாச்சாரம் பின்பற்றப்படுகிறது. அதற்கு தமிழகம் அடையாளமாக திகழ்கிறது. இந்தியாவிற்கே பல்வேறு கலாச்சாரங்களை வழங்கியிருக்கிறது தமிழகம்.

பட்டமளிப்பு விழா தொடர்பாக கவர்னர் அலுவலகத்திற்கும், பல்கலை.,க்கும் இடையே தவறான புரிதலால் குழப்பம் ஏற்பட்டது. மாணவர்களாகிய உங்களுடைய ஆற்றல், திறமை, பலத்தை நான் ஏன் புறக்கணிக்க வேண்டும். துணை வேந்தர் என்னை அழைக்க வந்த போது, அனைவருக்கும் பட்டம் வழங்குகிறேன் என்றுதான் கூறினேன். இந்த விஷயத்தை பொறுத்தவரையில் தகவல் பரிமாற்றத்தில் சிறிது குளறுபடி ஏற்பட்டு விட்டது. அதனால் பல்கலை., சார்பாகவும் எனது சார்பாகவும் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் பவனில் மகிழ்ச்சியாக இருப்பதல்ல கவர்னரின் வேலை. மாணவர்களாகிய உங்களை சந்தித்து உங்களுடைய எண்ணங்களை புரிந்து கொண்டு உங்களிடம் இருந்து நிறைய விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும். இளம் தலைமுறையினர் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறேன். 2047ம் ஆண்டு இந்தியா 100வது சுதந்திர தினத்தை கொண்டாடுகிறபோது வளர்ந்த நாடாக இருக்க வேண்டும் என்பதுதான் பிரதமரின் தொலை நோக்கு திட்டம். அது பிரதமரின் கனவு மட்டுமல்ல. அது உங்களுடைய கனவும், எனது கனவும்கூட. அதற்கு நாம் அனைவரும் பங்களிப்பு செய்ய வேண்டும். நாட்டில் உள்ள மற்றவர்கள், தமிழர்களையும், தமிழக மாணவர்களையும் உற்றுப்பார்க்கும் வகையில் பயணிக்க வேண்டும்.

இவ்வாறு கவர்னர் பேசினார்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலையில் மாணவிக்கு பட்டம் வழங்கும் பல்கலை வேந்தர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர். அருகில் துணை வேந்தர் சந்திரசேகர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள்.

நடிகர் ராம்சரண் நலம் : தெலுங்கு நடிகரும், நடிகர் சிரஞ்சீவியின் மகனுமான ராம்சரண் வலது மணிக்கட்டில் ஏற்பட்ட காயத்திற்காக அறுவைசிகிச்சை செய்ய கோவை கங்கா மருத்துவமனையில் 2 நாட்களுக்கு முன்னர் அனுமதிக்கப்பட்டார். நேற்று முன்தினம் அவருக்கு அறுவைசிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. நாளை (30ம் தேதி) மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்படவுள்ளார். அறுவைசிகிச்சை முடிந்த நிலையில், அவருடன் எலும்பியல் அறுவைசிகிச்சை துறைத்தலைவர் டாக்டர் ராஜசேகரன், பிளாஸ்டிக் அறுவைசிகிச்சை பிரிவு தலைவர் டாக்டர் ராஜா சபாபதி, டாக்டர் பிரவீன் பாரத்வாஜ் ஆகியோர் உள்ளனர்.

யூரியா இறக்குமதி 103.50 லட்சம் டன்

■ புதுடில்லி, ஜூலை 29-

நமது நாட்டில் 2025 –26 நிதியாண்டில் யூரியா உரம் இறக்குமதி 83 சதவீதம் அதிகரித்துள்ளது. மொத்தம் 103.50 லட்சம் டன் யூரியா உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

முந்தைய நிதியாண்டில் இது 56.47 லட்சம் டன்னாக இருந்தது.

இந்த தகவலை ராஜ்யசபாவில் நேற்று கேள்வி நேரத்தின் போது எழுத்து மூலம் அளித்த பதிலில் ரசாயனங்கள், உரத்துறை இணை அமைச்சர் அனுப்பிரியா படேல் தெரிவித்துள்ளார்.

சிறுவர் விடுவிப்பு; கிரிமினல் தப்ப முடியாது

'கரப்பான்' வழக்கில் சுப்ரீம் கோர்ட் உத்தரவு

■ புதுடில்லி, ஜூலை 29-

நீட் வினாத்தாள் லீக் பிரச்னை தொடர்பாக டில்லியில் பிஜேபியும், அதை ஆதரித்து மாணவர்கள் சார்பில் சில பகுதிகளிலும், போராட்டங்கள் நடந்தன. போராட்ட பகுதிகளில் அராஜக வன்முறைகள் தொடங்கிய போது, கலவரத்தை தடுக்க, தடியடி, ரப்பர் தோட்டாக்கள் வீச்சு ஆகிய நடவடிக்கைகள் நடந்தன.

இதுகுறித்து போராட்ட ஆதரவு தரப்பினரும், வன்முறைகளில் பாதிக்கப்பட்ட போலீசார் குடும்பங்களும், சுப்ரீம் கோர்ட்டில் மனு செய்துள்ளன.

இந்த மனுக்களை தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் ஜாய்மால்யா பக்ஷி, வி. மோகனா கொண்ட பெஞ்ச், நேற்று இணைந்து விசாரித்தது. பின்னர் வெளியிடப்பட்ட உத்தரவு:

* டில்லி உள்ளிட்ட பகுதிகளில் நடந்த போராட்டங்கள் தொடர்பான எப்.ஐ.ஆர்கள் அடிப்படையில், விசாரணை நடத்தலாம்.

* போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது.

* கைது செய்யப்பட்ட அல்லது பிடித்து வைக்கப்பட்டவர்களில் 18 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் இருந்தால், அவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

* போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் கிரிமினல் பின்னணி கொண்டவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அவர்களுக்கு சலுகை வழங்க முடியாது.

* போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தொடர்பான தனிப்பட்ட தகவல்களை வெளியிடக் கூடாது.

* போலீசார் மீது நடந்த தாக்குதல்கள் குறித்து விரிவான விசாரணை நடத்தப்படும்.

* டில்லியில் போராட்டக்காரர்களுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக குற்றச்சாட்டுகள் வந்துள்ளன. அவை குறித்த சுதந்திரமான, நேர்மையான விசாரணை நடத்த ஒரு சிறப்பு புலனாய்வு குழுவை அமைக்கலாம். இதுகுறித்து மத்திய அரசும் டில்லி காவல்துறையும் தங்கள் கருத்துகளைத் தாக்கல் செய்ய வேண்டும்.

* டில்லி, மகாராஷ்டிரா, பீஹார், கோவா, ம.பி., உ.பி. ஆகிய அரசுகளின் தலைமை செயலர்கள், இந்த மனுக்களுக்கு பதிலளிக்க வேண்டும்.

இவ்வாறு உத்தரவிட்ட நீதிபதிகள், விசாரணையை அடுத்த வாரத்துக்கு தள்ளி வைத்தனர்.

சபையில் எப்படி குரல் எழுப்பணும் எம்எல்ஏக்களுக்கு உதயநிதி பாடம்

■ சென்னை, ஜூலை 29-

தவெக அரசின் முதல் பொது பட்ஜெட் வரும் 5ம் தேதியும், வேளாண் பட்ஜெட் 6ம் தேதியும் தாக்கல் செய்யப்படுகிறது. இந்நிலையில், எதிர்கட்சித் தலைவர் உதயநிதி தலைமையில் திமுக எம்எல்ஏக்கள் கூட்டம் வீடியோ கான்பரன்ஸ் மூலம் நேற்று நடந்தது. தவெக அரசின் முதல் பட்ஜெட் கூட்டத் தொடரின்போது, திமுக எம்எல்ஏக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று உதயநிதி அறிவுறுத்தியதாக கூறப்படுகிறது. மேலும், தமிழகத்தில் நடந்த லாக்அப் மரணம் மற்றும் குதிரை பேரம் பற்றியும் சட்டசபையில் குரல் எழுப்ப வேண்டும் என்று அறிவுறுத்தியதாக தெரிகிறது.

கேஆர்பி நீர்மட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டம் கேஆர்பி அணை முழு கொள்ளளவு 52 அடி. நேற்றைய நிலவரப்படி, நீர் இருப்பு 49.35 அடியாக இருந்தது. நீர்வரத்து வினாடிக்கு 166 கன அடியாகவும், வெளியேற்றம் 226 கன அடியாகவும் இருந்தது. ஓசூர் கெலவரப்பள்ளி அணை முழு கொள்ளளவு 44.28 அடி. நேற்றைய நிலவரப்படி, நீர் இருப்பு 42.48 அடியாக இருந்தது.